இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 319 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆனி 14 – வியாழக்கிழமை 29 ஜுன் 2023 – கோவை ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 319 : Thiruvalluvar Year - 2054 - Aani 14 - Thursday 29 June 2023 - Kovai★★ 12 Pages ₹ 5.00


## நிதி ஒதுக்கீடு ரூ.1,505 கோடியாக உயர்வு! குறு, சிறு மற்றும் நடுத்தரத்

# தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கு அரசு துணை நிற்கும்!



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.6.2023) நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற பன்னாட்டு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் நாள் விழாவில், செங்கல்பட்டு மாவட்டம் கொடூர், திருச்சி மாவட்டம் மணப்பாறை மற்றும் மதுரை மாவட்டம் சக்கிமங்கலம் ஆகிய இடங்களில் உருவாக்கப்பட்டுள்ள மூன்று தொழிற்பேட்டைகளை தொடங்கி வைத்தார். உடன் குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ,அன்பரசன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை செயலாளர் வி.அருண் ராய், தமிழ்நாடு குறு சிறு தொழில் நிறுவனங்கள் சங்கத்தின் தலைவர் கே. மாரியப்பன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**சென்னை, ஜுன் 29 -**

**“குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வளர்ச்சிக்கு அரசு துணை நிற்கும்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பன்னாட்டு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் நாள் விழாவில் உரையாற்றும் போது உறுதிபடக் கூறினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (27.06.2023) சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற பன்னாட்டு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் நாள் விழாவில் ஆற்றிய உரை வருமாறு:-

தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டைக் கொண்டாடிக் கொண்டிருக்கக்கூடிய இந்த நேரத்தில், இந்த தொழில் நிறுவனங்களுடைய நாள் மிகச் சிறப்பாக எழுச்சியோடு, ஏற்றத்தோடு நடைபெறக்கூடிய விழாவாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

சமூகநீதியும், சமச்சீர் தொழில் வளர்ச்சியும் தலைவர் கலைஞர் அவர்களின் இரு கண்கள்.

பெரு நிறுவனங்களுக்கும் சிறு நிறுவனங்களுக்கும் ஒரே கொள்கை என்பது அனைவரையும் உள்ளடக்கிய சமச்சீர் வளர்ச்சிக்கு ஏற்றதல்ல என்பதை உணர்ந்தவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். இந்தியாவிலேயே முதன்முதலில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கென தனியாக ஒரு கொள்கையைக் கொண்டுவந்தார்.

> **பெரு நிறுவனங்களுக்கும் சிறு நிறுவனங்களுக்கும் ஒரே கொள்கை என்பது அனைவரையும் உள்ளடக்கிய சமச்சீர் வளர்ச்சிக்கு ஏற்றதல்ல என்பதை உணர்ந்தவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். இந்தியாவிலேயே முதன்முதலில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கென தனியாக ஒரு கொள்கையைக் கொண்டுவந்தார்.**

### சமச்சீர் வளர்ச்சிக்கு வித்திட்டவர் கலைஞர்

தொழில் முனைவோர்கள் எளிதில் தொழில் தொடங்க அனைத்து அடிப்படை வசதிகளையும் கொண்டு 1970 ஆம் ஆண்டிலேயே சிட்கோ தொடங்கி வைத்தார். இன்றைக்கு தமிழ்நாட்டில் 37 மாவட்டங்களில் 127 தொழிற்பேட்டைகள் இருக்கின்றன. இவ்வாறு சமச்சீர் வளர்ச்சிக்கு வித்திட்டவர் தான் நூற்றாண்டு விழா கொண்டாடிக் கொண்டிருக்கக்கூடிய நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்.

அவரது வழியில் பொருளாதார வளர்ச்சியிலும் சமூகநீதியை நிலைநாட்டிடும் விதமாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின தொழில்முனைவோர்களை ஊக்குவிக்கும் வகையில், நம்முடைய தமிழ்நாடு அரசு ‘அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம்’ என்ற ஒரு மகத்தான திட்டம் இன்று தொடங்கி வைக்கப்படுகிறது.

இந்தத் திட்டத்தின்கீழ் தொழிற்சாலைக்கான நிலம், கட்டடம், இயந்திர தளவாடங்கள் மற்றும் சுழற்சிக்கான நடைமுறை மூலதனம் ஆகியவற்றின் மதிப்பில் 35 விழுக்காடு முதலீட்டு மானியத்துடன் கடன் பெற்றிட வழிவகை செய்யப்பட்டுள்ளது. 6 விழுக்காடு வட்டி மானியம் பத்து ஆண்டுகள் வரை வழங்கப்படுகிறது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு இவ்வளவு மானிய சலுகையுடன் வேறு எந்த மாநிலத்திலும் இதுபோன்ற திட்டங்கள் இல்லை.

திட்டம் அறிவிக்கப்பட்ட இந்த குறுகிய மூன்று மாத காலத்தில் இதுவரை 127 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின தொழில் முனைவோர்களுக்கு 24 கோடியே 26 லட்சம் ரூபாய் மானியத்துடன் 45 கோடி ரூபாய் கடன் வழங்க ஒப்புதல் ஆணை பெறப்பட்டுள்ளது என்பதை நான் மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். இதில் 100 பயனாளிகளுக்கு ஒப்புதல் ஆணை இந்த நிகழ்ச்சியில் வழங்கப்பட்டிருக்கிறது.

### துறையின் முன்னேற்றத்திற்கு அரசு தனி கவனம்!

தமிழ்நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு பெரும்பங்காற்றும் MSME துறையின் முன்னேற்றத் திற்காக நம்முடைய அரசு தனி கவனம் செலுத்தி வருகிறது. ஓய்வு பெற்ற அதிகாரி என். சுந்தரதேவன் அவர்கள் தலைமையில் குழு அமைக்கப்பட்டது. அதன் பரிந்துரைகளின் அடிப்படையில் குறுகிய கால நடவடிக்கைகள், நடுத்தர கால நடவடிக்கைகள், நீண்ட கால நடவடிக்கைகள் என வகைப்படுத்தி நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

## பன்னாட்டு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் நாளில்

# 30,000 பேருக்கு வேலைவாய்ப்பு; ரூ.1723.05 கோடி முதலீடுகள்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற விழாவில் உறுதி செய்யப்பட்டது!

சென்னை, ஜுன் 29–

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற பன்னாட்டு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் நாள் விழாவில் சுமார் 30,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கிடும் வகையில் ரூ.1723.05 கோடி மதிப்பிலான முதலீடுகள் உறுதி செய்யப்பட்டது,

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (27.6.2023) சென்னை, நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற பன்னாட்டு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் நாள் விழாவில், சுமார் 30,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கிடும் வகையில் ரூ.1723.05 கோடி மதிப்பிலான முதலீடுகள் உறுதி செய்யப்பட்டது.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், வேலைவாய்ப்பு அளிப்பதிலும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் ஆற்றிடும் பங்களிப்பினை அங்கீகரிக்கும் விதமாக, ஒவ்வொரு ஆண்டும் ஜுன் 27 ஆம் நாள் பன்னாட்டு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் நாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. முதலமைச்சர் அவர்கள் பன்னாட்டு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் நாளினை அரசு விழாவாகக் கொண்டாடிட வேண்டும் என ஆணையிட்டார். அதன்படி, சென்னை வர்த்தக மையத்தில் பன்னாட்டு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் நாள் விழா அரசு விழாவாக சிறப்பான முறையில் நடைபெற்றது.

**அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தின் கீழ் தொழில் தொடங்க மானியத்திற்கான ஆணைகள் வழங்குதல்**

இவ்விழாவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சமத்துவபுரம் தந்து சமூக நீதி காத்திட்ட சமூக நீதி காவலர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழியில் பொருளாதார வளர்ச்சியில் சமூக நீதியை நிலைநாட்டிடும் விதமாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின தொழில்முனைவோர்களை ஊக்குவிக்கும் வண்ணம், இந்த ஆண்டு தமிழ்நாடு அரசு கொண்டு வந்துள்ள புதிய திட்டமான “அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டத்தின்” கீழ் முதல் 100 பயனாளிகளுக்கு ரூ.57.55 கோடி திட்ட மதிப்பீட்டில் தொழில் தொடங்க ரூ.18.94 கோடி மானியத்திற்கான ஆணைகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கி, தொடங்கி வைத்தார்.

இத்திட்டத்தின் கீழ் தொழிற்சாலைக்கான நிலம், கட்டடம், இயந்திர தளவாடங்கள் மற்றும் ஒரு சுழற்சிக்கான நடைமுறை மூலதனம் ஆகியவற்றின் மதிப்பில் 35 விழுக்காடு முதலீட்டு மானியத்துடன் கடன் பெற்றிட வழிவகை செய்யப்பட்டுள்ளது. இது மட்டுமல்லாமல், 6 விழுக்காடு வட்டி மானியம் வழங்கப்படுகிறது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு இத்தகைய மானிய சலுகையுடன் வேறு எந்த மாநிலத்திலும் திட்டங்கள் செயல்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இத்திட்டம் அறிவிக்கப்பட்ட இந்த குறுகிய மூன்று மாத காலத்தில் இதுவரை 127 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின தொழில் முனைவோர்களுக்கு ரூ. 24.26 கோடி மானியத்துடன் ரூ. 45 கோடி கடன் வழங்க ஒப்புதல் ஆணைகள் பெறப்பட்டுள்ளன.

**புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மூன்று தொழிற்பேட்டைகளை தொடங்கி வைத்தல்!**

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் தேவையை கருத்தில் கொண்டு, செங்கல்பட்டு மாவட்டம் கொடூர், திருச்சி மாவட்டம் மணப்பாறை மற்றும் மதுரை மாவட்டம் சக்கிமங்கலம் ஆகிய இடங்களில் 262.03 ஏக்கர் பரப்பளவில் ரூ.153.22 கோடி மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டுள்ள மூன்று தொழிற்பேட்டைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார். இதன்மூலம் சுமார் 21,500 நபர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்படும்.

**முதல் குறுந்தொழில் குழுமமாக கடலூர் மாவட்டத்தில் முந்திரி பதப்படுத்தும் குறுந்தொழில் குழுமத்தை தொடங்கி வைத்தல்!**

குறுந்தொழில் குழும மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் முதல் குறுந்தொழில் குழுமமாக கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், காடம்புலியூரில் ரூ.2 கோடியே 16 இலட்சம் திட்ட மதிப்பீட்டில், அதில் ரூ.1.81 கோடி தமிழ்நாடு அரசு மானியத்துடன் அமைக்கப்பட்டுள்ள முந்திரி பதப்படுத்தும் குறுந்தொழில் குழுமத்தை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாட்டில் பரவலாக குறுந்தொழில் நிறுவனங்கள் கொண்ட பல்வேறு குறுங்குழுமங்கள் (Micro Cluster) உள்ளன. ஊரகப்பகுதிகளில் நீடித்த நிலையான வேலைவாய்ப்பினை உறுதி செய்திடவும், பாலினம் மற்றும் சமூக சமநிலையை உறுதிபடுத்திடவும் இந்த குறுங்குழுமங்களை மேம்படுத்துவது இன்றியமையாதது ஆகும். இக்குறு நிறுவனங்களின் மேம்பாட்டிற்காக “குறுந்தொழில் குழும மேம்பாட்டுத் திட்டம்” என்ற புதிய திட்டத்தை

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

## ரூ.195 கோடி மதிப்பீட்டில்

# சென்னை வள்ளுவர் கோட்டத்தில் புதிய மேம்பாலம்!

## தமிழ்நாடு அரசு அரசாணை வெளியீடு!

*சென்னை, ஜுன் 29 -*

*சென்னையில் மிகவும் போக்குவரத்து நெரிசல் மிகுந்த சந்திப்புகளில் வள்ளுவர் கோட்டம் சந்திப்பும் ஒன்று. தினசரி ஆயிரக்கணக்கான வாகனங்கள் இந்தச் சந்திப்பை கடந்து செல்லும் நிலையில், இந்தச் சந்திப்பில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலை குறைக்க 98 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய மேம்பாலம் அமைக்கப்படும் என கடந்த சட்டப்பேரவை தொடரில் அமைச்சர் கே.என்.நேரு அறிவித்தார்.*

*இதன்படி, வள்ளுவர் கோட்டம் சந்திப்பில் 1 கிலோ மீட்டர் நீளத்துக்கு புதிய மேம்பாலம் கட்டப்படவுள்ளது.*

*இந்த மேம்பாலம் பாம்குரோவ் ஹோட்டல் முன்பு தொடங்கி கோடம்பாக்கம் நெடுஞ்சாலையில் முடிவடையும் வகையில் அமைக்கப்படவுள்ளது.*

*வடபழனி, கோயம்பேடு மேம்பாலம் போன்று நான்கு வழிகள் கொண்ட மேம்பாலமாக இது அமைய உள்ளது. குறிப்பாக வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலையில் இருந்து வரும் வாகனங்கள் நேரடியாக உத்தமர் காந்தி சாலைக்கு சென்று சேரும் வகையில் இந்த மேம்பாலம் அமைக்கப்படவுள்ளது. வள்ளுவர் கோட்டம் சந்திப்பில் மேம்பாலத்திற்கான நில எடுப்பு மற்றும் கட்டுமான பணிகளுக்காக ரூ.195 கோடிக்கு நிர்வாக அனுமதி அளித்து தமிழ்நாடு அரசு அரசாணை பிறப்பித்துள்ளது.*

*இதன்படி, மேம்பால கட்டுமான பணிகளுக்கு ரூ.67 கோடியே 16 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நில எடுப்பு பணிகளுக்கு ரூ.113 கோடியே 19 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேம்பாலம் கட்டுமான பணிகளுக்கு, 8 ஆயிரத்து 14 சதுர மீட்டர் அரசு நிலம் மற்றும் 2 ஆயிரத்து 883 சதுர மீட்டர் தனியார் நிலம் தேவை என்று கண்டறியப்பட்டுள்ளது.*

*தற்போது நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால் விரைவில் நிலயெடுப்பு பணிகள் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.*

## மேற்கு வங்க முதல்வர்

# மம்தா பானர்ஜி விரைந்து குணமடைய வேண்டுகிறேன்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

சென்னை, ஜுன் 29 –

மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி விரைந்து குணமடைந்திட வேண்டும் என முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் கூறியிருப்பதாவது:

**ஹெலிகாப்டர் அவசரமாகத் தரையிறங்கியதால் காயமடைந்துள்ள மாண்புமிகு மேற்கு வங்க முதலமைச்சர் செல்வி மம்தா பானர்ஜி அவர்களின் உடல்நிலை குறித்து ஆழ்ந்த அக்கறையை வெளிப்படுத்துகிறேன்.**

**அவர் விரைந்து தேறிட வாழ்த்துவதோடு, மீண்டும் அவர் முழு உடல் நலத்துடன் திரும்ப வேண்டுகிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.